**செய்தி வெளியீடு எண்: 236** **நாள்: 07.04.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 5.4.2018 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறையில் உள்ள ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரியில் 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இயற்பியல் ஆய்வுக்கூடம் மற்றும் நூலகம், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் உள்ள அருள்மிகு ஆனந்த விநாயகர் திருக்கோயிலில் 55 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

தமிழ்ப் பண்பாட்டின் பெட்டகமாகவும், ஆன்மீகத்தின் இருப்பிடமாகவும், கலைத்திறனின் நிலைக் களமாகவும் விளங்குகின்ற திருக்கோயில்களின் சொத்துக்களைப் பாதுகாத்து பராமரிப்பது, அன்றாட பூஜைகள் தங்கு தடையின்றி நடப்பதை உறுதி செய்வது, பக்தர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பது போன்ற பணிகளை இந்து சமய அறநிலையத் துறை மூலமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறையில், 1031 மாணவியர் பயிலும் ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரியில் 10,000 சதுர அடி பரப்பளவில் 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இயற்பியல் ஆய்வுக்கூடம் மற்றும் நூலகம்;

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, அருள்மிகு ஆனந்த விநாயகர் திருக்கோயிலில் 2127 சதுர அடி பரப்பளவில், 55 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 90 பக்தர்கள் உணவருந்தும் வகையில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடம்;

என மொத்தம் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.இரா. காமராஜ், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் திரு.அபூர்வ வர்மா, இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திருமதி ஆர். ஜெயா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**